# வண்புருடோத்தமம்

## ( புருஷோத்தமன் ஸந்நிதி )

**புருஷோத்தமன்:** பௌருஷம் கொண்டவன் புருஷன்: புருஷர்களுள் சிறந்தவன் புருஷோத்தமன். எம்பெருமானைக் குறிக்கும் திருநாமங்களுள் புருஷோத்தமன் என்பது ஒன்று. எல்லா உலகங்களையும் காக்கும் வலிமை கொண்டவன் ஸ்ரீ நாராயணன் ஒருவனே. இவனை ஸர்வக்ஞன், ஸர்வசக்தன் என்றெல்லாம் கூறுவார்கள். இவனது திருமேனி ஸௌந்தர்யம், கரியவாகிப்புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடும் நீண்ட அப் பெரியவாய கண்கள், திருமகளும் இறையும் பிரியாது உறையும் திருமார்பு, மண்ணாண்ட திண்தோள்கள் முழந்தாள் வரை நீண்டு உருக்கும் திருக்கைகள் ஆகியவையே எம்பெருமானைப் புருஷோத்தமன் என்று காட்டிவிடுகின்றன. பிறர்க்குப் பொருளை வரையாது கொடுப்பவன் வள்ளல்; எம்பெருமான் மாபெரும் வள்ளல்! அறம் பொருள் இன்பம் வீடு ( தருமம், அர்த்தம், காமம், மோக்ஷம் ) என்ற நாற்பெரும் பயன்கள்! இவற்றை வாரி வழங்குபவன் ஸ்ரீமந் நாராயணன்! கொடுத்துக்கொடுத்து இவன் கைகள் நீண்டன போலும்! உலகினுக்கு மேன்மேலும் உதவவேண்டும் என்று நினைப்பவன் இவன்! பல உதவிகளைச் செய்த போதிலும் 'நாம என்ன செய்து விட்டோம்?' என்று தன்னைப் பற்றி நினைப்பவன். இப்படிப் பட்டவனே வண்புருஷோத்தமன்! இவனது தொடர்பால் இவனிருக்கும் திவ்ய தேசத்திற்கும் வண்புருடோத்தமம் என்று பெயர் ஏற்பட்டது. விரும்பிய பயனை உடனே அளிக்க வல்லது இந்தத் திவ்யதேசம்! திருமங்கையாழ்வார், "கம்பமா கடலடைத்து" என்ற திருமொழியால் (பதிகத்தால்) வண்புருடோத்தமனை மங்களா

சாதனம் செய்கிறார். பெருமான் வண்புருடோத்தமன்: நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார். தாயார் புருஷோத்தம நாயகி 'கடலடைத்த பெருமாள்' என்ற திருப்பெயரோடு உத்ஸவர் எழுந்தருளி இருக்கிறார். கடலடைத்த பெருமாள் (ஸ்ரீராமபிரான்) மூலவர், பட்டாபிராமனாக வீற்றிருந்த திருக்கோலத்தில் எழுந்தருளி இருந்த தாகத் தெரிகிறது.

**பிரியான்; பிரிந்தால் தரியான்!**. இந்த ஸந்நிதியின் அருகில் உள்ள குளத்திற்குத் 'திருப்பாற்கடல்' என்று பெயர். ஒரு குளத்திற்குப் பாற்கடல் என்று சொல்வதைக் கேட்கும் போது வியப்பாகத்தான் இருக்கும்! ஆனால், இக்குளம் இப்பெயர் பெற்றதற்கு அழகிய (காரணம்) வரலாறு ஒன்று கூறப்படுகிறது. காவேரிக் கரையிலுள்ள திருநாங்கூர்ப் பகுதியிலிருந்து காவேரி கடலோடு கலக்கும் இடம் வரை (பூம்புகார் அல்லது காவேரிப்பட்டினம் வரை) ஒரு காலத்தில் பெரும் காட்டுப் பகுதியாகவே இருந்ததாகத் தெரிகிறது. இவ்வனத்தின் ஒரு பகுதிக்கு வில்வாரண்யம் என்றும், மற்றொரு சிறு பகுதிக்குப் பலாசவனம் என்றும் பெயர் இருந்தது பல முனிவர்கள் இப்பெருவனத்தில் தவம் செய்து கொண்டிருந்தனர். பலாச வனப் பகுதியில் தான் பதினொரு எம்பெருமான்கள் கோயில் கொண்டுள்ளார்கள்.

வியாக்ரபாதர் என்பவர் ஒரு முனிவர்; இவர் மாத்யந்தினர் என்ற ரிஷியின் குமாரர். இவர் ச்வேதாரண்யத்திலுள்ள (திருவெண்காடு) அகஸ்த்ய முனிவரின் ஆச்ரமத்திற்குஅருகில் ஓரிடத்தை அமைத்துக் கொண்டு அருகிலுள்ள திருமால் திருப்பதிகளை ஸேவித்து வந்தார். இவருக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் உபமன்யு என்பதாகும். அவன் மிகச் சிறுவனாக இருந்த நாள்! அவனுக்கு மூன்று வயது இருக்கும்! வியாக்ரபாதர் எங்கு சென்றாலும் அவனை உடன் அழைத்துச் செல்வார். ஒருநாள் புருஷோத்தம

னுடைய திருவடிகளில் தூமலர் தூவித் தொழ வேண்டும் என்று நினைத்தார். தம் மகனை வண்புருடோத்தமத்தில் (இந்தத் திவ்யதேசப் பகுதியில்) இருக்கச் செய்து, அருகிலுள்ள நந்தவனத்தில் மலர் கொய்து வரச் சென்றார் வெகு நேரம் ஆயிற்று! தந்தையைக் காணவில்லை. முனிகுமாரன் பசி தாகத்தினால் அழுதான் புருஷோத்தமநாயகியின் புருஷகாரத்தினால் புருஷோத்தமன் பாற்கடலையும், விரஜா நதியையும் வரவழைத்துச் சிறுவனின் பசி தாகத்தைத் தீர்த்தான். இச்சிறுவனைத் தம் கையால் தடவிக் கொடுத்தான். வியாக்ரபாதர் திரும்பி வந்து தம் மகனைக் கண்டார். அவனது முகத்தில் 'ப்ரம்மவர்சஸ்' ஒளிர்வதையும், உடலில் விளங்கும் தனியழகையும் கண்டு நடந்த நிகழ்ச்சியை அறிந்தார். பகவானை ஆர்வத்தோடு துதித்து வணங்கினார். இக்காரணம் பற்றியே இக்குளத்திற்குத் 'திருப்பாற்கடல்' என்று பெயர் ஏற்பட்டதாக ஸ்தல வரலாறு கூறுகிறது. கார்த்திகை சுக்ல பக்ஷத்வாதசியன்று அருணோதய காலத்தில் எல்லாப் புண்யதீர்த்தங்களும் இக்குளத்தில் வந்து கூடுகின்றனவாம். உதங்கர் என்னும் முனிவர் புருஷோத்தம க்ஷேத்ரத்தில் நைஷ்டிகத் தவம் செய்தார். அதனால் மகிழ்ந்த ஸ்ரீமந் நாராயணன் பங்குனித் திருவோண நன்னாளில் ஸஞ்ஜீவன விமானத்தில் எழுந்தருளி இவனுக்கு ஸேவை ஸாதித்தான் என்றும் வரலாறு கூறுகிறது.

இக்கோயிலில் மணவாள மாமுனிகள் எழுந்தருளி இருக்கிறார். ஆண்டுக்கு ஒரு முறை திருமங்கையாழ்வார் இப் பதினொரு திவ்யதேசத்து எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்ய எழுந்தருளுகிறார். மங்களாசாஸனம் செய்து மிகப்பொலிவுடன் அகமகிழ்ந்து நிற்கும் ஆழ்வாரை ஸ்ரீமணவாள மாமுனிகள் (வடிவழகு அனுசந்தானத்தோடு) மங்களாசாஸனம் செய்கிறார். இப்படிப்பட்ட பாக்யம் இவர் ஒருவருக்கே உள்ளது.

பகவான் பிராட்டியையும், அவனைக் கொடுத்த பாற்கடலையும், தன்னை விட்டுப் பிரியாமல் தொண்டு செய்யும் திருவனந்தாழ்வானையும் பிரிவது இல்லை. பிரிந்தால் தரித்திருப்பதுமில்லை. அதனால்தான் இங்கேயும் புருஷோத்தம நாயகி, திருவனந்தாழ்வான் திருவவதாரமாகிற மணவாள மாமுனிகள் ஆகியவர்களோடு திருப்பாற் கடலருகில் எழுந்தருளி இருக்கிறான் என்றால் இது மிகையாகாது.

**அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை :** திருநாங்கூர்ப் பகுதியில் மாக்குமரச் சோலைகள் நிரம்பியுள்ளன. அவற்றின் இடையே தென்னை மரங்கள் ஓங்கி வளர்ந்திருக்கின்றன. மரத்திலுள்ள மிகப் பெரிய காய்கள் (தெங்கம் பழங்கள்) தாமாகவே அருகில் இருக்கும் குளத்தில் விழுகின்றன. அதனால் குளத்தில் பேரொலி கேட்கிறது. குளத்தில் கவலையில்லாமல் வாழும் வாளை மீன்கள் ஒலியைக்கேட்டு அஞ்சுகின்றனவாம். தம்மைப் பிடிக்க ஏதோ ஒன்று தண்ணீரில் குதித்து விட்டது என்று மருண்டு இக்குளத்திலிருந்து அருகிலுள்ள நீர் நிலைக்குத் துள்ளித் தாவுகின்றனவாம். புருஷோத்தமனின் திருவடிவாரத்தில் வாழும் உயிரினத்திற்கு இவ்வளவு அச்சம் ஏற்படுவது ஏன்? அபயத்தை அளிக்கும் (அஞ்சல் என்னும்) அவனது திருக்கை சிவனது சாபத்தையும் தீர்த்ததே! தான் நன்மை பெறவேண்டும் என்ற நோக்கத்தோடுதானே சிவனும் எம்பெருமானிடம் வந்தான். அவனோடு இருக்கும்போது பயமேன்? அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை.

**வாளையார் தடங்கண் உமைபங்கன் வன்சாபம் மற்றது நீங்க**
**மூளையார் சிரத்ஐய முன்னளித்த எம்முகில் வண்ணனுறை**
**கோயில்,**
**பாளைவான்கமுகூடுயர்தெங்கின் வன்பழம்விழ வெருவிப்போய்**
**வாளைபாய் தடஞ்சூழ் திருநாங்கூர் வண்புருடோத்தமமே.**

**(பெரியதிருமொழி 4-2-3)**

இப்பாசுரத்தைச் சொல்லிக்கொண்டு சேவித்தால் வண்புருடோத்தமன் நம் அச்சத்தை நீக்கி நம்மைக்காப்பான்.

**நன்மை தரும் செயல்கள் :** ஒவ்வொருவனும் நன்மை பெற்றே தீரவேண்டும் என்று விரும்புகிறவன் பகவான். ஒருவன் செய்யும் செயல்களில் ஏதேனும் ஒன்றைக் கொண்டே அவனை ரக்ஷிக்க வேண்டும் என்று விரும்புகிறான். ஒருவன் அறிவிலியாக இருந்தாலும், அவன் தன்னையும் அறியாமல் பகவானின் பெயரையும், அவன் உறையும் ஊரின் பெயரையும் சொன்னால், அவற்றையே காரணமாகக் கொண்டு பகவன் அவனுக்கு நன்மையளிக்கிறான். 'சீரார் திருவேங்கடமே திருக்கோவலூரே என்று தொடங்கிப் பாரோர் புகழும் வதரி வடமதுரை' என்று, திருமங்கையாழ்வார் அருளிச்செய்த திவ்யதேசங்களின் பெயர்களைக் கூறுவது சிறந்தது என்பதையும் ஒருவாறு உணர்த்துகிறார். பக்தியின் மேலீட்டாலும் திருப்பதிகளின் பெயரையே சொல்லிக் கொண்டிருப்பதும் உண்டு. பரகால நாயகி பகவானை விட்டுப் பிரிந்த ஆற்றாமை மீதூர்ந்து இருந்தக்கால், திருக்குடந்தை, திருக்கோவலூர், திருநறையூர் என்று கூறிப்பாடத் தொடங்கினாள். அதுபோல் வண்புருடோத்தமனை ஸ்ரீமந்நாராயணன் இருக்கும் ஊர்களைச் சொல்லவேண்டுமானால் திருவரங்கம், திருவேங்கடம், திருக்குடந்தை, திருமாலிருஞ்சோலை, துவராபதி, வண்புருடோத்தமம் என்று கூறுதல் வேண்டும். இவ்வூர்கள் அவனருள் பெற்றுத்தரும் இடங்களாகும் என்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

**சாய்ந்த திருவரங்கம் தண்வேங்கடம் குடந்தை**
**யேய்ந்த திருமாலிருஞ்சோலை – பூந்துவரை**
**வண்புருடோத்தமமாம் வானவர்க்கும் வானவனும்**
**ஒண்புருடோத்தமன் தனூர்.**

**(நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி-34)**